(உ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. லா. சந்தானம்.*

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பதாவது முதல் நாற்பத்து மூன்றாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

முற்பகல் 11–15

(ஊ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஆறு மற்றும் நூற்று முப்பத்து ஏழாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(எ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.*

திருமதி வளர்மதி ஜெபராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டுகளுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து ஐந்தாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதமும் பதிலுரையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது விவாதமும் பதிலுரையும். திரு. துரைமுருகன்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு. (குறுக்கீடு)*